



# விலங்கு விசர் நோயை இல்லாதொழிப்போம்





தயாரிப்பு:
கல்விசார் வெளியீடுகள் தயாரிப்பலகு,
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவப் பிரிவு,
மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

தயாரிப்பு ஆலோசனை:
வைத்திய கலாநிதி. பே.ஆ. டினேஸ் கூஞ்ஞ
விரிவுரையாளர்,
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவப் பிரிவு,
மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

தயாரிப்பு உதவி:
மு.மு. முகம்மட் சுபாட்
32ம் அணி
யாழ் மருத்துவ பீடம்

❖ விலங்கு விசர்நோய் என்றால் என்ன?

இது ஒருவகை வைரஸ் (Rhabdo Virus) தொற்றினால் ஏற்படும் நோயாகும்.

தொற்றுக்குள்ளான நாய் எம்மைக் கடிப்பதனால் அல்லது உமிழ்நீர் காயங்களில் படுவதன் மூலம் ஏற்படுகிறது.

❖ இந்நோய் நாயினால் மட்டும் பரப்பப்படுமா?

இல்லை பூனை, கீரி, குரங்கு, ஆடு, மாடு, ஓநாய், நரி, வௌவால் எனபவற்றினாலும் பரப்பப்படும்.

❖ இந்நோயின் தாக்கம் என்ன?

நரம்புத் தொகுதியைத் தாக்கி மரணத்தை ஏற்படுத்துகிறது.

❖ எவ்வாறான நாய் கடிப்பதனால் இந்நோய் ஏற்படுகிறது?

வைரஸ் தொற்றுக்குள்ளான நாய் கடிப்பதனால் மட்டுமே.

❖ இதை எவ்வாறு நாம் அறிந்து கொள்வது?

நோய்த் தொற்றுள்ள நாயில் பின்வரும் அறிகுறிகள் காணப்படும்

- கோபமடைந்த நிலை
- கண்ணில் தெரிகின்ற பொருட்களைக் கடிக்கும்
- நீரை விழுங்க முடியாத நிலை
- அதிகரிக்கும் உமிழ்நீர் சுரப்பு
- அசாதாரணமாக ஊளையிடல்
- திடீரெனக் கடித்தல்
- சயகட்டுப்பாடற்ற செயற்பாடுகள்
- அசாதாரண நடவடிக்கைகள்.

❖ மனிதரில் நோய் ஏற்பட்டால் எவ்வாறான அறிகுறிகள் தென்படும்?

- காய்ச்சல், வியர்வை
- மூச்சுத்திணறல், குழப்பநிலை, கோபம்
- அசாதாரண நடவடிக்கைகள்
- பேசுவதில் சிரமம்
- நீரை விழுங்க முடியாத நிலை, நீரைப்பார்த்தால் பயம்
- கண்கள் மூட முடியாத நிலை

- காற்றை எதிர்கொள்ள முடியாத நிலை
- அதிகரித்த உமிழ்நீர் வெளியேறல்
- தொண்டைப்பகுதி இறுக்கமடைதல்
- தொடர்பற்ற செயற்பாடுகள்

❖ விசர்நாய்க் கடிக்கான தடுப்பு மருந்தை எல்லா நாய்களுக்கும் வழங்க வேண்டுமா?

ஆம், பிறந்து 6வது கிழமை பின்பு 3-6 மாதங்களிலும் அதன்பின் வருடாவருடமும் ஏற்றல் வேண்டும்.

❖ நாய்க்கடியேற்படின் கடிபட்ட இடத்திற்கு மேலால் கயிற்றினால் கட்டுவது உகந்ததா?

இல்லை குருதியோட்டம் தடைப்படுவதால் தசையிழையங்கள் சிதைவடையலாம்.

❖ கடிபட்ட இடத்தை கவனியாது விடுவது சிறந்ததா?

இல்லை, தற்செயலாக நாய் ஏற்கனவே தொற்றுற்றிருப்பின் எமக்கு உயிராபத்து ஏற்படலாம். ஆகவே சவர்க்காரமும் நீரும் கொண்டு 10 நிமிடம் வரை தொடர்ந்து நன்றாக கழுவவும். வைத்திய ஆலோசனையை அரசாங்க வைத்தியசாலையில் இருந்து பெற்றுக்கொள்ளவும்.

❖ நாய்க் குட்டிகளை செல்லப்பிராணிகளாக வைத்திருப்போர் அவதானமாக இருக்க வேண்டுமா?

ஆம், ஒவ்வொரு நாளும் துப்பரவாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் வருடந்தோரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டும்.

❖ பழக்கமில்லாத நாய்களுடன் எவ்வாறு நடந்த கொள்ள வேண்டும்?
தெரியாத நாய்களை ஆதரிக்க வேண்டாம். வெளியிலிருந்து கொண்டு வந்த நாய்களுடன் முதலாவது தடுப்பூசி வழங்கிய பின் ஒரு மாத காலம்வரை கவனமாக இருக்கவும்.

- நாய்க்கடி ஏற்பட்ட பின் நாய் பற்றி அவதானமாக இருக்க வேண்டுமா?

ஆம், 14 நாட்களுக்கு அவதானமாக இருக்க வேண்டும். நாய் திடகாத்திரமாகவும் சுகதேகியாவுமிருப்பின் ATT தடையூசியேற்றிக் கொள்ள வேண்டும். விலங்கானது விசர்நோயால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அல்லது சந்தேகமிருப்பின் முழுமையான ARV சிகிச்சை பெறப்பட வேண்டும்.

- நாய்க்கடியேற்படுவதைத் தடுக்க உங்கள் பங்களிப்பு என்ன?

  - வருடந்தோரும் தடுப்பூசி மருந்தேற்றல்.
  - நாய்களைப் பதிவு செய்து உரிய முறையில் கூட்டினுள் வளர்த்தல்.
  - தேவையற்ற பெருக்கத்தைத் தவிர்ப்பதற்கு கருத்தடை செய்தல்.
  - நாய்க்குட்டிகளை பொது இடங்களில் விட வேண்டாம்.
  - கட்டாக்காலி நாய்களை ஒழிக்க உள்ளூராட்சி சபைக்கு ஒத்துழைப்பு வழங்கவும்.

- கடைசியாக வழங்கப்பட்ட **ARV** தடுப்பூசியானது 6 மாதங்களுக்குட்பட்டடிருப்பின் மீண்டும் தடுப்பூசி போட வேண்டுமா?

இல்லை

- நாயொன்று உங்களை ஊற்றுப்பார்த்துக் கொண்டிருப்பின் நீங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும்?

அவ்விடத்திலேயே அசையாமல் நிற்கவும்.
கைகளை ஒன்று சேர்க்கவும்.
மனதினுள்ளே இலக்கங்களை எண்ணிக் கொண்டிருக்கவும்.
அவை சென்றபின் அவ்விடத்தை விட்டு நகரவும்.